# /அவசரம்/

வேலூர் மாவட்ட  முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.4304/ஆ3/2023          நாள்.22 .07.2024

பொருள் : பள்ளிக் கல்வி – கல்வி உதவித்தொகை திட்டம் 2023– 2024 ஆம் கல்வி ஆண்டில் அரசு/அரசு உதவிபெறும் மற்றும் சுயநிதி கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதிதிராவிடர் வகுப்பைச்சார்ந்த மாணக்கர்களுக்கு கல்வி உதவித்தொகை விடுவித்தல் ஆதார் seeding செய்தல் தொடர்பாக

பார்வை : வேலூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் கடிதம் ந.க.கே6/162/2024, நாள். 09.07.2024

-----

வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு/அரசு உதவிபெறும் மற்றும் சுயநிதி கல்வி நிறுவனங்களில் 2022– 2023 ஆம் கல்வி ஆண்டில் பயின்ற ஆதிதிராவிடர் வகுப்பைச்சார்ந்த மாணக்கர்களுக்கு EMIS தரவு தளத்திலிருந்து தகுதியான மாணக்கர்களின் விவரங்களை பெற்று கல்வி உதவித்தொகை விடுவிக்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் வேலூர் மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் 2023 – 2024 ஆம் கல்வியாண்டில் 9 மற்றும் 10 ம் வகுப்பு பயின்ற மாணக்கர்களுக்கு கல்விஉதவித்தொகை Aadhar Seeding செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டு வருவதாக அனைத்து அரசு/அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி உயர்/மேல் நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. Aadhar Seeding செய்யப்படாத 1597 மாணக்கர்களுக்கு கல்வி உதவித்தொகை விடுவிக்கப்படாமல் நிலுவையில் உள்ளதாக பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் Aadhar Seeding செய்யப்படாத 1597 மாணக்கர்ளின்ஆதார் எண்ணுடன் வங்கி கணக்கு எண்ணை seeding செய்யவும், வங்கி கணக்கு எண் இல்லாத மாணக்கர்கள் அஞ்சலகம் (Postal Bank) மூலம் வங்கி கணக்கு எண் துவங்கி மாணக்கர்களுக்கு உரிய கல்வி உதவி தொகையை பெற்று வழங்குமாறு அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு : மாணக்கர்களின் விவரம்.

//ஒப்பம் //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

1. தலைமை ஆசிரியர்கள்,
   அனைத்து அரசு/அரசு உதவிபெறும் உயர்/மேல்நிலைப்பள்ளிகள்.
   வேலூர் மாவட்டம்.
2. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (தனியார் பள்ளிகள்)
   வேலூர் மாவட்டம்.
   (தொடர் நடவடிக்கையின் பொருட்டு)
3. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (இடைநிலைக்கல்வி)
   வேலூர் மாவட்டம்.
   (தொடர் நடவடிக்கையின் பொருட்டு)

நகல்.
வேலூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.